பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 667 **நாள்: 11.11.2026**

மணலி மண்டலத்தில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் 450 மரக்கன்றுகள் இன்று நடப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 12 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 15 மண்டலங்களிலும் மரக்கன்றுகள் நடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. சாலை ஓரங்கள், சாலை மையங்கள், மயானபூமிகள், பூங்காக்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகள், குளங்கள், ஏரிகள், ஆறுகள் மற்றும் கால்வாய்க் கரைகள் உள்ளிட்ட பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. மேலும், மரக்கன்றுகள் நடுவதற்கு தன்னார்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பு நலச்சங்கள் ஆகியோர் ஊக்குவிக்கப்பட்டு, மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மரக்கன்றுகள் நடும் பணிகளுக்காக மரக்கன்றுகள் வளர்க்கும் நாற்றங்கால் பண்ணைகள் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும், தனியாரிடமிருந்தும், வனத்துறையிடமிருந்தும் மரக்கன்றுகள் கொள்முதல் செய்தும் நடும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

மரக்கன்றுகள் நடும் பணிகளின் ஒரு பகுதியாக, இன்று (11.11.2026) வடக்கு வட்டாரம், மணலி மண்டலத்தில் ஃபியூச்சுரா பிரதான சாலை (Futura Main road), ஃபியூச்சுரா லேஅவுட் (Futura Layout), மணலி புதுநகர் 5ஆவது பிளாக்கில் உள்ள பூங்கா, கடப்பாக்கம் ஏரி, மற்றும் இடையஞ்சாவடி மயானபூமி ஆகிய பகுதிகளில் 450 மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், வார்டு-22க்குட்பட்ட ஃபியூச்சுரா பிரதான சாலை (Futura Main road) மற்றும் ஃபியூச்சுரா லேஅவுட் (Futura Layout) பகுதிகளில் மரக்கன்றுகளை நட்டு, இப்பணிகளைப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், வார்டு-22க்குட்பட்ட காமராஜர் சாலையில் உள்ள இஜாஸ் டேனிங் பிரைவேட் லிமிடெட் பகுதியில் குப்பைக் கழிவுகளை தரம் பிரித்து வழங்குவது குறித்தும், சின்ன சேக்காடு பகுதியில் ஈரக்கழிகளில் காற்றுப் புகாத வகையில் உலர்த்தி உரம் தயாரிக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மண்டல அலுலவர் திரு.பி.அரவிந்தன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.